145

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

# திருச்செந்தில் வெண்பா வந்தாதி

திரு. அ. சிவாநந்தசாகர யோகீச்வரர்

அவர்களியற்றியது

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பெனி,

திருவல்லிக்கேணி

சென்னை.

1915

[விலை அணா 1

ஐ26:417
N15
121369

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை

திரிசிரபுரம்

திரு-அ. சிவாநந்தசாகர யோகீச்வரர் அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருச்செந்தில் வெண்பாவந்தாதி

காப்பு

திங்கணுதல் வள்ளிபுணர் செந்திலர்க்கு வெண்பாவாற்
பொங்குசுவை யந்தாதி போற்றிசெயத்—துங்க
மருவா ரணமுகத்தான் மால்விடையா னீன்ற
கருவா ரணமுகத்தான் காப்பு.

நூல்

சீர்பரவுஞ் செந்திலமர் தெய்வச் செழுஞ்சுடரே
பார்பரவு மோனப் பரசிவமே—நார்பரவும்
வேதனெடு மால்பணியு மெய்ப்பொருளே யீங்கெனக்குன்
பாதமல ரன்றியுண்டோ பற்று. (1)

பற்றறுத்தார்க் கின்பம் பயக்கும் பசுந்தேனை
நற்றவத்தோர் நாடு நறுங்கனியை—யெற்றுகடற்
சீரலைவாய்க் கற்பகத்தைச் சென்றுபணி யாதெவனோ
வூரலைவாய் நெஞ்சே யுரை. (2)

உரைக்குந் தரமாமோ வொண்கமலப் பூமே
லிருக்குமொரு வற்குமிக் கென்றுந்—திருக்கிளர்வெண்
முரலைவாய் வள்ளியிரு முற்று முலைக்குருகுஞ்
சீரலைவா யப்பன்றிறம். (3)

திறனழிவாய்ப் பேதையர்க்குச் செய்தேவ னாறு
[illegible]றநெறியோர் [illegible]று மறியாய்—மறநெறிகள்
வல்லாய்செந் தூரனடி வாழ்த்தா யவன்புகழைக்
கல்லாய்நிற் கேதோ கதி. (4)

கதியுளதோ வென்னுங்காற் காசினியி லெற்குன்
பதயுகள மன்றிப் பகராய்—துதிபாவுஞ்
சிந்தா வளங்குலவுஞ் சீரலைவாய் மேயவருட்
கந்தா கருணா கரா. (5)

கரந்தைமதி யாறணியுங் கண்ணுதலோ னீன்ற
நிரந்தரநற் செந்தூரி னித்தன்—அரந்தையொடு
தீராத வெவ்வினைநோய் தீர்த்தெனையாட் கொண்டளித்தான்
பாராரு மெச்சப் பரிந்து. (6)

பரிகரிதே ரூர்ந்துகடற் பாராண்ட செல்வர்
கரிகரியாய் மண்புகுதல் கண்டுந்—திரமெனவே
தேடிப் புதைக்கமனஞ் செல்லாமற் செந்திலநிற்
பாடித் துதிக்கப் பணி. (7)

பணிவே னுனையென்றும் பண்டைமறை நாவின்
றுணிவேயென் னாவித் துணையே—புணையாகப்
பூவார் செழுங்கமலப் பொன்னடிதந் தாள்சன்ன
மாவாரி தாண்ட மகிழ்ந்து. (8)

மகிழ்வார் பிறந்திறக்கு மானிடரைப் பாடி
யிகழ்வார்வே தாகமநூ லென்றுஞ்—சகமீதி
லெற்றுக் கிவர்பிறந்தா ரெண்ணுங்கா லென்னைகருப்
பற்றக் கணத்தொழிதல் பண்பு. (9)

பண்டைவினை போக்கும் பரஞ்சுடரைப் பல்லுயிரோ
டண்டமெலா மீன்றளிக்கு மாண்டவனைத்—தொண்டரெதிர்
வந்திடும்பை மாய்க்குமருள் வள்ளலைநெஞ் சேதரள
முந்துகடற் செந்திலிற்கண் டுய். (10)

உய்யும் வகையுளதோ வுந்துபக டந்தகனார்
செய்யுந் துயரமெலாந் தீர்ந்துநெஞ்சே—செய்யுணெடுங்
கன்னறரு முத்துழவர் காவிடறுஞ் சீரலைவாய்
மன்னருள்பெற் றாலன்றி மற்று. (11)

மற்றுமொரு தேவை மறந்தும் பணிவேனோ
முற்றத் துறந்த முனிவராருக்—குற்ற
துணையான சீரலைவாய்த் தூயவனுக் காளா
யிணையாரு மற்றே றினி. (12)

இனிதுதிருச் சீரலைவா யெந்தைபிரான் பொற்றாட்
கனவரதம் பொங்கியெழு மன்பாற்—கனியு
மனமடையப் பெற்றால் வரைவில்லாக் கோடி
சனன மெடுக்குறினுந் தான். (13)

தானே கருணையினாற் றன்னிலைகாட் டித்தமியற்
கூனேய முற்று மொழித்தருளித்—தேனூறுஞ்
சேயிதழ்ப்பூந் தாமரைத்தாள் சிந்தனைசெய் வாழ்வளித்தான்
ஆயபுகழ்ச் சீரலைவா யான். (14)

ஆன பரசமய வாழ்கடல்வீழ்ந் தெண்ணரிய
வீனபவ மெய்தி யிறந்தொழியா—தேனமுட
ஞேதிமமுந் தேடுமரற் கோம்பொருள்சொல் சீரலைவாய்
நாதனிரு தாண்மலரை நாடு. (15)

நாடுவதுஞ் சீரலைவாய் நாதனிரு தாண்மலரே
கூடுவதன் னேனடியார் கூட்டமே—தேடுவது
மின்னே ரிடைக்குறமின் மேவுகு னின்னருளே
பின்னே தெயக்குப் பிறப்பு. (16)

பிறிதொன்றை நாடப் பெரிதுளதோ வானாள்
சிறிதென்ற றிந்திலைநஞ் செந்தூர்க்—கிறைவன்றன்
பாதம் பணிந்து பரகதிபெற் றுய்யவல்லால்
ஏதங்கொ ணெஞ்சே யியம்பு. (17

இயமுழங்குஞ் சீரலைவா யெந்தைதிருக் கோயிற்
புயன்முழங்குங் கோபுரமுன் போந்து—மயலொழிந்து
பாடுகிலை பாடிப் பணிகிலையெவ் வாறேநீ
கூடுவது முத்திநெறி கூறு. (18)

கூற்றுறழ்வை வேற்கட் கொடியிடையார்க் காட்பட்டு
மாற்றரிய சென்ம மறிகடல்வீழ்க்—தாற்றரிய
துன்படைவே னைத்தயவாற் றூக்கிச்செந் தூராபே
ரின்பமுற வைப்பதினி யென்று. (19)

என்றுமுனைப் பாடி யிறுமாந் திருப்பதன்றித்
துன்றுகடற் சீரலைவாய்ச் சொல்லோனே—குன்றுதொறு
மாடற் கிசைந்த வமலா பிறதெய்வ
நாடிப் பணிவதிலை நான். (20)

நானுணர்வு பெற்றதொரு நாண்முதலாய் நின்மலர்த்தாட்
கானதுதி செய்தவப்ப தன்றியுண்டோ—வேனயனக்
கள்ளவிழ்பூந் தார்க்குறமின் காதலா வேழையின்மே
லெள்ளளவு நீயிரங்கா தென். (21)

என்னபிழை நாயே னிழைத்தாலுஞ் சீரலைவாய்
மன்னவவை யெல்லா மனங்குறியா—தென்னையம்பொற்
பூப்பதுமத் தாள்பரவும் புண்ணியரிற் கூட்டியென்றுங்
காப்பதுமக் கான கடன். (22)

கடலொருசால் வாயாநங் கத்தனருட் கெண்ணில்
இடருழலு நெஞ்சே யெழுந்து—கொடிநுடங்கு
மாடமலி சீரலைவாய் மாநகர்சென் றெந்தைபுகழ்
பாடுதுநா முய்யும் படி. (23)

படியொடுவிண் ணோரும் பதம்பெறினுந் தீவாய்க்
கொடுநரகுற் றாலுமுனைக் கூறுந்—திடமொழியேன்
றெண்கடன்முத் தஞ்சொரிந்து சேவிக்குஞ் சீரலைவாய்க்
கண்மணியே யுண்மையிது காண். (24)

காணே னுனைப்போலுங் காசினியின் மெய்த்தெய்வஞ்
சேணாடர் போற்றுதிருச் செந்தூரா—வேணாணும்
பேரழகா தெய்வப் பிடிகணவா நீபமலர்த்
தாரழகா நின்கருணை தா. (25)

தாவென்று போயிரக்குந் தன்மையும்வந் தேற்றவரைப்
போவில்லை யென்றனுப்பும் புன்றொழிலு—மாவென்ற
நிற்பரவா வன்னெஞ்சு நீண்டபுகழ்ச் சீரலைவாய்க்
கற்பகமே போக்கியெனைக் கா. (26)

காக்குநெடு மாலுங் கமலமலர்ப் பண்ணவனும்
போக்கும் புராந்தகனும் போற்றிசைப்பத்—தாக்குமுனை
வாளவுணர்ச் செற்றலைவாய் வள்ளலருள் செய்தான்புத்
தேளிரமிழ் துண்ணுஞ் சிறப்பு. (27)

சிறப்புதவுங் கல்விச் செழிப்புதவு மெய்தாத்
துறக்கவள னிம்மைதருந் தொல்லை—மறப்பகைகொன்
றந்தமிலா நந்தமுத்தி யாக்குமிசைச் சீரலைவாய்க்
கந்தபிரான் செம்பொற் கழல். (28)

கழலிணையும் வெள்ளக் கருணைமலர்க் கண்ணு
மழகொழுகு மாமுகங்க ளாறும்—பொழிகிரண
மாணிக்க வண்ண வடிவுஞ்செந் தூரினெஞ்சே
காணத் தவஞ்செய் கடிது. (29)

கடிமலரோன் முன்னெழுதுங் கையெழுத்துன் செம்பொன்
னடிமலர்வைத் தாலழியா வாற்ற—லுடையதுவோ
புண்ணா டயிற்குலிசப் புத்தே ளடிபரவ
விண்ணா டளித்தாய் விளம்பு. (30)

விளங்குமறை யுட்கிடந்த மெய்ப்பொருளு முள்ளக்
களங்கறுமெய்ஞ் ஞானநெறி காணும்—வளங்கொணல
வற்புதப்பே ரின்பமுத்தி யாகுமிசைச் சீரலைவாய்க்
கற்பகத்தைக் கைதொழுதக் கால். (31)

கால்வருடி மாதரிரு கட்கடைபார்த் தன்னவர்பான்
மால்பெருக வேங்கி மயங்காதே—நால்வருள்
பாவுளமெய்ஞ் ஞானப் பனுவலுள சீரலைவாய்த்
தேவுளநெஞ் சேதுதிகள் செய். (32)

செய்ய பவளச் செழுங்குன்றே கூற்றுதைத்த
ஐயவிடைப் பாக னருங்குமரா—உய்யவெனை
யாண்டவனே சீரலைவா யாதியே நீபமலர்
பூண்டவனே நீயென் புகல். (33)

புகலரிய வேதப் பொருளா யுயிர்கட்
கிகபரவாழ் வீயு மிறையாய்—மகபதிமால்
வேதனரற் கெட்டா விழுப்பொருளாஞ் சீரலைவாய்
நாதனுக்கா ளென்றென் று நான். (34)

நானே யறிந்துதொழ நல்லறிவில் லாமைகண்டே
தானேவந் தென்னைத் தடுத்தாண் டான்—மீனேறு
தண்கடன்முத் தஞ்சொரியுந் தன்னிகரில் சீரலைவாய்ச்
சண்முகவேள் பொன்னடிக டந்து. (35)

தந்தைதிருச் சீரலைவாய்ச் சண்முகனே தாயாவார்
பைந்தொடிதெய் வானைவள்ளிப் பாவையரே—சொந்தத்
துணைவரயில் வேன்மயிலே சுற்றமவ னன்ப
ரிணையெனக்கிங் காவா ரெவர். (36)

ஆவதுந மிச்சைவண்ண மாகா தனவுநெஞ்சே
யாவையுநஞ் செய்கையினென் றேங்காதே—தாவிலெழில்
வேரலைவாய் மென்பணைத்தோள் வெற்பரையின் கன்னியருள்
சீரலைவா யீசன் செயல். (37)

செயலற்றுன் பொன்னடிக்கென் சிந்தையெலா மாக்கி
மயலற்று வீழ்புலன்கள் வாட்டி—யியல்பெற்ற
செந்திற் பதியாய் சிவானந்த வாரிதிளைத்
தெந்தவித முய்கே னிசை. (38)

இசையுற்று வாழ்வதற்கே யெண்ணிநினை யுற்றேன்
வசையுற்று மாழ்கல் வழக்கோ—நசையற்றார்க்
கின்பமருள் செந்தா ரிளங்குமரா கிண்கிணிசூழ்
பொன்பதுமத் தாளாய் புகல். (39)

புகலிடம்வே றுண்டோ பொறியிலிகாள் செந்திற்
சகம்புகழு மீசனடி சாரார்க்—கிகலிக்
கதுமெனவிங் காவிதனைக் கைக்கொள்வான் மேதிப்
பொதுவனுளஞ் சீறிவரும் போது. (40)

போதிருக்கச் சோலைதொறும் போயெடுத்துச் சீரலைவாய்
நாதனிரு தாட்கணிய நாடாமற்—காதடர்க்குஞ்
சேலைநிகர் வாட்கட் டெரிவையர்க்கே நீபுரியும்
வேலையெலா நெஞ்சகமே வீண். (41)

வீணுக் குழைத்து வெறுக்கைக் குவைதேடி
நாணுக்கு நாளு நலியாமே—பூணுக்
கழகளிக்கும் பேரெழிற்றெய் வானைபுணர் செந்திற்
குழகனைப் பாடவருள் கூர். (42)

கூர்த்தவயிற் கண்ணாற் கொமைமதர்மென் வெம்முலையாற்
சேர்த்தவமு தன்னமொழிச் செப்பத்தாற்—சீர்த்தவறி
வெல்லாங் கவர்மடவார்க் கெய்த்திளையா தெற்கலைவாய்
நல்லா னளித்தா னலம். (43)

நலனிறைந்த கன்னியர்போ னுடுபுகழ்ச் செந்திற்
குலமறைக்கு மெட்டாத கோவே—யுலகினில்யாம்
மற்றோரை நோக்கி மகிழா துனைப்பணிந்து
மெற்றோ விரங்கா தெமக்கு. (44)

எமபடர்செய் துன்பொன்று மெய்தாவாம் பாரி
லமைபிறவி மாய்வுமுறு வாகும்—தமரநெடுங்
காரலைவா யோதக் கடலருகே யோங்குதிருச்
சீரலைவாய் கண்டவரைச் சென்று. (45)

கண்டவரெ லாமயங்கக் கைதவவே டம்புனைந்து
கொண்டளவி லாப்பெருமை கொண்டுசுக—முண்டும்
அரும்பாவி நெஞ்சேமெய் யன்புசெய வின்னும்
விரும்பாவி தென்ன வியப்பு. (46)

வியப்புடைத்தே நானிலத்து மெய்யன்பர்க் கெல்லாங்
கயக்கமலக் கட்குறமின் காந்தன்—மயற்கருத்தி
னுன்னா ருழையெய்தா வோங்குபுகழ்ச் சீரலைவாய்
மன்னா னெனக்களித்த வாழ்வு. (47)

வாழ்வடையுங் காலை மகிழ்கின்றாய் தீவினையாற்
றாழ்வடையுங் காலைச் சலிக்கின்றாய்—பாழ்மனமே
எல்லா மிறையருளென் றெண்ணியிறு மாப்புறலே
வல்லாண்மை யாக மதி. (48)

ஆகமவே தப்பொருளை யாய்ந்தறிகி லேன்செந்தி
லேகனிணைப் பூசைசெய வெண்ணுகிலேன்—பாகமுத
மன்னமொழிப் பாவையர்க்கே யாளானே னெவ்வணமோ
வின்னலகன் றின்பமடை வேன். (49)

வேனிற் கணைமதனும் வெங்கலியும் வேட்கைகளும்
தானுற் றலைக்கநின தாண்மறந்தே—யானித்தம்
வம்பவிழுஞ் சோலையலை வாய்க்குமரா தீப்புழுப்போல்
வெம்புதுயர் போக்கு விரைந்து. (50)

விரைமலர்ப்பூந் தாமரைநேர் மென்கொட்டி யாங்காற்
றிரைமணிமுத் தங்கொழிக்குஞ் செந்தூர்க்—குரைகழலெம்
ஆண்டவனைப் பாஷாண்ட ராதரிக்க மாயைபுரிந்
தீண்டலையுந் தேவரிணை யே. (51)

இணைபிரியா நேசருநல் லின்பமனை யாளுந்
துணைவரொடு சுற்றத்தார் சூழ்ந்து—தணலுமிழ்கட்
காலனுயிர் கொள்ளக் கறுத்துவரிற் காப்பாரோ
மாலொழியா நெஞ்சே மறித்து. (52)

மறிப்பாரு ளையெவரோ வார்கடல்சூழ் செந்திற்
குறப்பாவை கொங்கைபுணர் கோவே—தறை[illegible]லென்
சிந்தா குலமொழித்துன் சேவடிக்கா ளாக்கியரு
டந்தா லடாதென்று தான். (53)

தானென் றழியுஞ் சடத்தைமதித் துப்பிறவி
யூனந் தருங்கடற்பட் டோய்வேனுக்—கானந்த
மாகவெதிர் தோன்றி யருள்புரிய வெண்ணுதியோ
வாகைபுனை செந்திலிறை வா. (54)

இறைப்பொழுதே னுந்தன்னை யேத்தினரைக் காக்கச்
சிறைக்கலபி மேற்கொண்டு செந்தே—னுறக்கமலம்
பூத்திருக்குஞ் செய்களெலாம் பொன்சொரியுஞ் செந்திலிறை
காத்திருக்குஞ் சித்தங் களித்து. (55)

களியரெனப் பல்சமயக் கத்தான் மயங்கித்
தெளிவிழந்தே னுண்மை தெரியேன்—உளமெலிந்துன்
பூத்தமலர்த் தாளே புகலடைந்தே னஞ்சலெனக்
காத்தருள்செய் செந்தின்முரு கா. (56)

முருகா திருச்செந்தின் முன்னவா வென்றென்
றுருகாத பேதைக் குறுமோ—வருகாக்
கதியுந் திருவுங் கருதயன்மா லிந்த்ர
பதியுந் தரும்பொற் பதம். (57)

பொன்னை மனையைப் பொருளைச் சதமென்று
தன்னை யிழந்த தகவிலியேற்—கன்னை
யனையாய் திருச்செந்தி லையாநின் னுண்மை
யினையோதி யாட்கொள் ளினி. (58)

இனியேனுந் துன்பமகன் றின்பமுற லாமென்
றனைபோலுஞ் சீரலைவா யப்பா—வினையோதிச்
சித்தங் களிப்பேனைத் தீராத் துயரிலுற
வைத்தனையிஃ தென்ன வழக்கு. (59)

வழங்குவையோ செந்தில் வாதா வெனக்குஞ்
செழுங்கமல வேதனரி திங்கட்—கொழுந்தும்
இணர்க்கொன்றை யுஞ்சூடு மீசன்முடி மீது
மணக்கு திருத்தாண் மலர். (60)

தாண்மலருஞ் செங்கைத் தடமலருந் துங்கமதி
வாண்முகமும் போருட்கண் மாமலரும்—தோண்மலையும்
வாயார வாழ்த்தி வணங்கவரந் தந்தனனல்
மாயா விசைச்செந்தின் மன். (61)

மன்னுபுகழ்ச் சீரலைவாய் வள்ளலெனச் சிந்தைகனிந்
துன்னுதொறு மானந்த மூற்றெடுத்துப்—பன்னுபுல
னைந்தும் பொதிந்தவச மாகித் தனையுமறந்
துய்ந்துகதி கண்டே னுவந்து. (62)

வந்தனைசெய் யன்பரக மாமலரோ பொய்மையிலாச்
சந்தமறை நாவின் றனிமுடியோ—சந்ததமு
மும்பரயன் மால்புகழ வோங்குசெந்தி லாலயமோ
எம்பெருமா னீவா ழிடம். (63)

இடப்பா லொருமடவாட் கீந்துசடை மேலோர்
மடப்பாவை மேவவருள் வள்ளல்—விடைப்பா
லெழூவா னுகந்தருளு மெந்தையைச்செந் திற்கண்
டொழுவார்தம் பங்கே சுகம். (64)

சுகமே பெறுவதன்றித் துன்பமொரு நாளுஞ்
சகமே லுணர்தலிலோஞ் சற்றும்—பகரேர்வான்
பாசமினி யஞ்சுகிலோம் பார்புகழுஞ் சீரலைவாய்
ஈசனடிக் காளான யாம். (65)

யாமே பெறுதுமினி யேங்கன் மடநெஞ்சே
பூமே லயனனமாய்ப் போந்தறியாத்—தூமேவு
குன்றவரி விற்காத்தான் கோமுடிமே லின்பமுறச்
சென்றலரும் பூங்கமலத் தேன். (66)

தேனே செழுங்கனியோ தீம்பாகோ தெள்ளமுது
தானே வெனப்புலவர் தாம்புகழ—யானும்
பைந்தமிழா லேயுன்னைப் பாடவலை வாய்க்குமரா
வந்துதா நீமதுர வாக்கு. (67)

வாக்கும் பலிக்குமின்ப வாழ்வுவரும் பூமடவார்
நோக்குமக லாதிருக்கு நுண்ணறிவுண்—டாக்கு
மணப்போ தணியுமலை வாய்க்குமரா வென்று
கணப்போது சிந்திப்பார் கட்கு. (68)

சிந்திக்க வைம்புலனுந் தித்திக்குந் தீங்கரும்பை
வந்திக்க வாழ்வுதரும் வான்மணியைப்—புந்திக்குட்
கூர்ந்தவிருள் போக்குங் கொழுஞ்சுடரைச் சீரலைவாய்
சேர்ந்துபணிந் துற்றேன் றிரு. (69)

திருமாலோ நான்முகனே சேண்புரக்குந் தெய்வத்
தருமாலோ முந்தினவர் சாற்றாய்—பொருளான
மூவர்க்கு முன்னாய் முளைத்தவலை வாயாநின்
னேவற் றொழும்பாள ரில். (70)

ஆளான தின்றலைவா யாண்டவனுக் கின்றடையிற்
கேளாமோ வென்றலையேல் கேட்டிலையோ—வாளாலே
வீசச் சினந்துவரு வெய்யவற்குந் தண்ணருளாற்
பாசத் தளையறுத்த பண்பு. (71)

பண்ணமைந்த மாமயிலாய்ப் பார்புரக்குஞ் செந்திலன்மேற்
கண்ணுங் கருத்துங் கலந்திருத்தி—யெண்ணு
மடியாரைத் தேடி யவரிடமே சென்று
குடியாக வாழுங் குகன். (72)

குகனே திருச்செந்திற் கொற்றவனே கங்கை
மகனே மெய்ஞ்ஞான வளமே—யகமாயை
வென்றார்க்கும் பூங்கழலாய் வேதமுதல் வாகதிநீ
யென்றார்க்கு முண்டோ விடர். (73

உண்டெனமெய் வேத முறைக்குந் தனிமுதலை
மிண்டருணர் கில்லா விழுப்பொருளை—வண்டுளறித்
தண்டேனுண் டாடுந் தழைபொழில்சூழ் செந்திலிலே
கண்டேனுள் ளின்பங் கலந்து. (74)

கலகலென வம்பொற் கழனூ புரங்க
ளொலிசெயநீ யென்முனம்வந் துற்றால்—விலவிலத்தே
யென்பந்த மெல்லா மிரிந்துவிடை கொள்ளாதோ
வின்பந்த மில்லா யிசை. (75)

இசையுமுனக் கியான்பெருமை யெய்திச் சிறந்தால்
வசையுமுனக் கியானிழிந்து மாழ்கின்—திசையனைத்து
மூடும் புகழ்ச்செந்தின் முன்னவா நின்கருணை
நாடும் புலையேற்கு நல்கு. (76)

நல்குரவே வேறிடநீ நாடியெனை விட்டோடிச்
செல்குவதே நிற்குச் சிறப்பிலையேல்—மல்குமருள்
வாரி நிகர்த்தவலை வாயான் முனியினயிற்
கூறிலைவே லேவிக் கொலும். (77)

கொலைபயிலும் வாட்கட் கொடியிடையார் கொங்கைக்
கிலையளவென் றெண்ணிமய லெய்திக்—குலைமனமே
காணுழி செந்திற் கடவுளடி போற்றவுறும்
வானாடர் போற்றும் வளம். (78)

வளங்கொடிருச் சீரலைவாய் வள்ளலடி போற்ற
விளங்குமணிக் கோபுரமுன் மேவ—உளங்கொளுநல்
லின்பமெலாங் கூடி யெதிர்கொண் டழைத்திடுமே
துன்பமெலா மோடத் துரந்து. (79)

துப்பனைய மேனிச் சுடரையடி யார்க்கெய்ப்பில்
வைப்பனைய ஞான வளமையினை—யப்பனையென்
னாருயிரைச் சீரலைவா யானைமறந் துய்வேனோ
தாரணியி லோர்கணமுந் தான். (80)

கணங்கொண்ட தேவரெலாங் கைகுவித்துச் சால
மணங்கொண்ட பூச்சொரிந்து வாழ்த்தி—வணங்குஞ்
சரணமல ரென்றலைமேற் சாத்தியலை வாயா
மரணமொடு வெம்பவமு மாற்று. (81)

மாற்றுரையாச் செம்பொன்னே மாணிக்கத் தூமணியே
சாற்றுபுகழ்ச் சீரலைவாய்த் தாருவே—போற்றியுனை
யேகா தவித்திறைஞ்சு மென்றுயரம் வேர்மாண்டு
போகா விதென்னற் புதம். (82)

அற்புதமா மென்பர்சித்தி யானவெட்டு மாற்றிலெழும்
புற்புதநேர் யாக்கைப் பொதிவிழைந்திங்—கற்பகலும்
நீண்டபுகழ்ச் சீரலைவாய் நின்மலனை யெப்பொருட்கு
மாண்டவனைப் போற்றவறி யார். (83)

அறியேனை யெவ்விதத்து மாட்கொள்ளா யாயிற்
பிறிதோர் புகலுளதோ பேதைக்—குறிதாவிக்
கூட்டிநறு நெய்தயிர்பால் கொண்டருந்து மான்மருகா
வேட்டவரந் தந்தாள் விரைந்து. (84)

தந்தா வளமுகனைத் தன்றுணையாப் பெற்றவயிற்
கந்தா திருச்செந்திற் காவலா—நொந்தா
ருளமகிழ வந்தாங் குதவுமயி லாய்நின்
றளமலர்ப்பொற் றாளே சரண். (85)

சரணமென நாடித் தனையடைந்தார்க் கென்றும்
அரணமெனச் செந்திலம ரையன்—கிரணமணிப்
பொன்செய்மா நூபுரத்தாள் போற்றிசெயா தின்றளவு
மென்செய்தாய் நெஞ்சே யிவண். (86)

வண்ணமலர் தூவி வணங்கவறி யேன்சித்தத்
தெண்ணவறி யேனுன்னை யென்செய்கேன்—புண்ணியநீ
பாட்டிற லன்பர் பாவுபத மெற்கருளாற்
காட்டிற லுண்டு கதி. (87)

கதிரை மதியைக் கனலைவிழி யாக்கொண்
டிதழிமுடி மேற்சூடு மீசன்—றுதிபுரியத்
தப்பா மறைப்பொருளைத் தந்தருளிச் சீரலைவாய்
வைப்பாவுற் றானவனெம் வாழ்வு.. (88)

வாழ்வா வதுசெந்தில் வானவனைச் சிந்தித்துத்
தாழ்வாய் வணங்கிச் சலதிநிக—ரேழ்பிறப்பு
மற்றா ரடிப்புழுதி யாடிக் களிப்பதுவே
மற்றேது மின்று மதி. (89)

மதிகெட்டே நின்னை மறந்திளைத்தே னிந்நாள்
துதிபெற்ற சீரலைவாய்த் தொல்லோய்—விதிபெற்ற
துன்பந் துடைத்த சுடரிலைவேற் கந்தாவுன்
அன்பொன்று நாயேற் களி. (90)

அளிசிறந்த கற்பகத்தை யன்புசெயு மன்ப
ருளமலிந்த ஞான வொளியைக்—களிசிறந்த
வண்டாடுஞ் சோலையலை வாயினிலே சென்றொருகாற்
கண்டாலே தீருங் கலி. (91)

கலிகடல்போற் கொக்கரித்துக் காலபடர் கிட்டிக்
குலைகுலையத் தாக்கியுயிர் கொள்ளப்—பொலிவிழந்து
வாடாத முன்னமலை வாயாநின் பொன்னடியைத்
தேடாத நாய்க்குதவி செய். (92)

உதிப்பதினுஞ் சாவதினு முற்றுழலா வண்ணங்
கதிக்குரிய ஞானெறி கண்டு—விதிப்பதும
வேதாவு நாடருநின் மெய்ப்பதமேத் தக்கருணை
தாதா செயந்தியினு தா. (93)

தாமதநீ செய்யத் தகுமோ வினையன்றிப்
பூமிதனில் வேறோர் புகலுண்டோ—காமனுதற்
கண்ணு லெரியக் கறுத்தா னருள்பவள
வண்ணு வடிவேல வா. (94)

வாவாவென் றன்னை வருந்தியழைத் தாலருளிந்
தாவாவென் றென்னைத் தயவுடனே—மாவென்றி
விண்ணு டளித்த விமலா புரந்தருள
வெண்ணாத தென்னோ இசை. (95)

என்னோ வறிந்திங் கெனக்குதவ வீன் றசிசுத்
தன்னோ வறிந்துவருந் தாய்போல—முன்னோடு
பின்னற்ற சீரலைவாய்ப் பெம்மானே நாயடியேன்
முன்னிற்கு மாறே முயல். (96)

முயற்சியெலாம் வீணே முடிவ துண்டோ நெஞ்ச
மயக்கமிலாத் தொண்டரெலாம் வாழ்த்தித்—தியக்கமறப்
பாடிப் பணியுமலை வாயான் பதமலரை
நாடிப் பணியு நமக்கு. (97)

குற்றமனந் தம்புரியுங் கொள்கையுணர் வில்லாவென்
சிற்றறி வினுக்கியல்பே செய்யுமவை—முற்றமறந்
துய்யவெனைக் காப்ப தனக்கியல்பா னலைவாய்த்
துய்யவெனக் குண்டோ துயர். (98)

துயர்கெடவுஞ் சென்மத் தொடர்பறவும் பாழ்த்த
மயல்கெடவு மெய்ஞ்ஞானம் வாய்ப்புற்—றயர்வறநின்
மோனத் திருக்கு முறைமைதனைச் சீரலைவாய்
ஞானக் குருவே நவில். (99)

நவிலவெளி தான நலமினிது கூட்டுந்
தவமுடைய னேனென் றமியேன்—குவிமனத்தோர்
பத்திக்கு வாய்த்தசெந்திற் பாக்கியமே யுள்ளவுள்ளத்
தித்திக்கு நின்னிருதாட் சீர். (100)

செந்திலாண்டவன் திருவடிவாழ்க.

முற்றிற்று.

G. C. LOGANADHAM BROS. THE GUARDIAN PRESS, SECOND LINE BEACH, MADRAS

# புத்தக விளம்பரம்

தெய்வ குஞ்சரியம்மன் திருமணக் கும்மி.—இதில் முருகக்கடவுள் உற்பத்திமுதல் அவர் திருப்பரங்குன்றத்தெழுந்தருளி, தெய்வ குஞ்சரியம்மனைத் திருமணஞ் செய்துகொண்ட வைபவமுடிய மனத்திற்கும் செவிக்கும் பரமாநந்தந்தரும் கும்மிகளாகப் பாடப்பட்டிருக்கிறது. விலை அணா 1

பார்வதியம்மாள் திருமணக் கும்மி 0—0—6

சுப்பிரமண்யர் தோத்திரக்கொத்து.—இப்புஸ்தகத்தில் நூறு பாடல்கள் அடங்கியுள்ளன; அதாவது, பத்து விதமான பதிகங்கள், இப்பத்துப் பதிகங்களும் திருச்செந்தில், திருவேரகம் முதலாகிய ஆறுபடை வீடுகளிலும் விளங்காநின்ற ஆண்டவன்மேற் பாடியவையாம் ஒவ்வொன்றிலும் பக்திப்பிரவாகத்திலிருந்து உண்டாகிய அமுதமெனப் பகரத்தக்க சொல்லும், பொருளும், சுவையும் அமைந்துள்ளன. தேவகுஞ்சரி யம்மாள் என்னும் ஒரு பிராமண மாது, தமக்கு நேர்ந்த ஒரு கொடிய நோய் தீரும்பொருட்டு இப்பதிகங்கள் பாடிச் சௌக்கிய மடைந்தமையால் புத்தகமாக வெளியிடலானோம். பக்திமான்கள் யாவரும் இப்புஸ்தகத்தி லொன்று வாங்கிப் படித்து ஆண்டவனைத் துதித்து அவர் கருணைக்குப் பாத்திரவான்களாவார்களென நம்புகின்றோம். 0—3—0

N. B. எல்லாவிதத் தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும். காட்லாக் இனாம்.

Sri. BALASUBRAMANIAM & Co.,
Book Sellers & Pabliers.
*Triplicane, Madras.*

THE GUARDIAN PRESS
MADRAS